REGD. NO. M. 6311 ★ தனி இதழ் 0—1—0 அணு ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE: 55630

நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்

The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

மலர் 41 சென்னை: மார்கழி 26உ புதன் (9—1—57) ★ ★ வெளியூர்: மார்கழி 27உ வியாழன் (10—1—57) இதழ் 183

இனி எல்லாம் இந்தி மயம்தானும்!

இந்தியாவின் எதிர்காலம் எப்படி இருக்கும் என்பதை, சூசகமாகக் கூறியிருக்கிறார் சென்னை நிதி மந்திரி சுப்பிரமணியம்!

இந்தூர் மாநாட்டிலிருந்து திரும்பிய அவர், மாநாட்டு நடவடிக்கைகள் அனைத்தும் இந்தியிலேயே நடைபெற்றதாகக் கூறியிருக்கிறார். இனிமேல், மக்கள் சபைக்கு உறுப்பினர்களாகச் செல்வோருக்கு இந்தி மொழி அறிவு கட்டாயம் தேவைப்படும் என்றும், இல்லாவிட்டால் அவர்கள் சபையின் நடவடிக்கைகளை அறியமுடியாது என்றும், அகில இந்திய ரீதியில் இந்தி பெற்று வரும் முக்கியத்துவத்திற்கு இந்தூர் மாநாடு ஒரு எடுத்துக்காட்டாயிருந்தது என்றும் அவர் கூறியிருக்கிறார்.

தோல்விகண்டால்தூக்கில்தொங்கமாட்டோம்!

150 இடங்களில் போட்டியிடுவது ஜனநாயகக் கடமையாற்றவே!

சாபமிடுவோருக்கு பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் தரும் பதில்

பணக்காரரை நம்பி வாழும் நிலை காங்கிரசுக்கு நீடிக்க முடியாதென எச்சரிக்கை

"நமது நாட்டிலேதான் தேர்தலுக்கு நிற்பவர்கள், நாட்டு மக்களிடம் போய் நிதி கேட்டுக் கெஞ்சவேண்டிய நிலை இருக்கிறது. இதற்குக் காரணம், நமது நாட்டுத் தேர்தலுக்கு இருக்கிற விலை மற்ற நாடுகளையெல்லாம்விட அதிகம்!

கடமையை ஆற்றும் ஜனநாயக வளர்ச்சி

"அமெரிக்காவை எடுத்துக் கொண்டால், அங்கு தேர்தலுக்கென்று இவ்வளவு பணம் தேவையில்லை; அங்கே தேர்தலில் நிற்பவர்களுக்கு அதிகச் செலவும் இல்லை; அங்கே பத்திரிகைகள் இருக்கின்றன ஏராளமாக! யார் யார் எங்கெங்கே போட்டியிடுகிறார்கள் என்பதையெல்லாம் பத்திரிகைகளைப் பார்த்தே மக்கள் அறிந்துகொள்கின்றனர். தேர்தலுக்கு நிற்பவர் சார்ந்துள்ள கட்சியின் கொள்கை என்ன என்பதை ஆராய்ந்தறிகிறார்கள்; பிறகு தமது ஓட்டு இன்னாருக்குத் தருவது என்று தீர்மானிக்கிறார்கள்; ஓட்டுச் சாவடிக்கு வந்து 'கியூ' வரிசையில் நிற்கிறார்கள். தேர்தலைப் பற்றி ஒருவன் மற்றவனுக்கு எடுத்துச் சொல்லவேண்டிய நிலை இல்லை; அந்த அளவிற்கு இன்னொருவன் சொல்லித் தெரிந்துகொள்ளவேண்டிய ஆள் அங்கில்லை. அங்கெல்லாம் கட்சிப் பிரச்சாரங்கள் நடைபெறத்தான் செய்கின்றன—தங்கள் தங்கள் கொள்கைகளை ஒவ்வொரு கட்சியினரும் எடுத்துக் கூறுவார்கள். அங்கிருப்பவர்களிலே 100க்கு 97 பேர் 98 பேர் ஓட்டுப் பதிவு செய்து தங்கள் கடமையை ஆற்றும் வகையில் அங்கெல்லாம் ஜனநாயக வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. எனவே, அங்கு கட்சிகளுக்கு அதிகச் செலவில்லை.

இங்குள்ள நிலை என்ன?

"ஆனால், நமது நாட்டு நிலை அப்படி அல்ல; நாம் தேர்தலில் நிற்கிறோம் என்று அறிவிப்பதற்கே பணம் தேவையாக இருக்கிறது! தேர்தலில் ஈடுபடுகிறோம் என்று தெரிவிப்பதற்காகப் போடப்படும் 'வால்போஸ்டர்'கள் அச்சடிக்க ரூபாய்—அவைகளை ஒட்டுவதற்கு ரூபாய்—மக்களிடம் நம்மை அறிமுகப்படுத்திக் கொள்ள போக்குவரத்திற்கு ரூபாய்—கூட்டங்கள் நடத்துவதற்குப் போலீஸ் லைசென்சுக்கு ரூபாய்—இப்படி நமக்கு எதற்கெடுத்தாலும் பணம் தேவைப்படுகிறது.

நியாயமான சரக்கு விலை போகாத நிலை!

"இந்த நாட்டுச் சர்க்கார், ஒரு எம். எல். ஏ.-வாகப் போட்டியிடுவதற்கென விதித்திருக்கிற நியாய விலை ரூ. 9,000! ஆனால் இந்த நியாயமான சரக்கோ நியாயமான விலைக்குப் போவதில்லை. அதற்குமேல் செலவு செய்தால் எம். எல். ஏ. ஆவதற்குத் தகுதி பெற்றவரல்லவாம்! அதுபோலவே ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பதவிக்குப் போட்டியிடுவதற்கும் சர்க்கார் விதித்திருக்கிற நியாய விலை 14,000 ரூபாய்!

நிதி தாரீர், தாரீர் — காணீர், காணீர்!

"இவைகளினாலெல்லாம் நாம் தத்தளிக்கிறோம்; பொது மக்களிடம் சென்று காலணா அரையணாவாகத் தேர்தல் நிதி திரட்டுகிறோம். எனவே, நமக்கு இந்த நிதி அத்தியாவசியமானது தானே தவிர அநாவசியமானதல்ல. அதனால்தான் நாங்களும் பொதுமக்களிடம் வந்து 'நிதி தாரீர், தாரீர்' என்றுகேட்கிறோம், மக்களும் எங்களைப்பார்த்துக் 'காணீர் காணீர்—நிதி தருகிறோம்' என்று கூறுகின்றனர்.

நாமும்—அவர்களும்!

"இந்தப் பணம், கழகம் வெற்றிபெறும் வழிகளைக் கடைப்பிடிக்க அல்ல பயன்படுவது. பணத்தை வெற்றி பெறும் வழியாக நினைத்துக் கொண்டிருப்பவர்கள் காங்கிரசார். 'தேர்தலுக்கு இரண்டு நாட்களுக்கு முன் ஒரு இலட்சம், இரண்டு இலட்சம் ரூபாயை வாரி வீசி மாற்றுக் கட்சியினரை அமிழ்த்திவிட்டால் தேர்தல் நம் பக்கம்' என்று கருதுகின்றனர்.

அந்தக் காலம் எங்கே—இன்றுள்ள நிலை எங்கே?

"உண்மையிலேயே காங்கிரஸ் மக்களை நம்பியிருந்த காலம் ஒன்றுண்டு. உண்மையான உழைப்பாளிகளையெல்லாம் காங்கிரஸ் நம்பியிருந்த காலம் ஒன்றிருந்தது. காங்கிரசில் சேரவேண்டுமா? காங்கிரசில் ஏழை எளியவர்கள்தான் சேர முடியும்—தடியடிபடுவோர் பொறுத்துக்கொள்ளவேண்டும்;—தாங்கிக்கொள்ளவேண்டும்; எரவாடா சிறையில் 8 நாட்கள் இருந்திருக்கவேண்டும்;—இப்படிப்பட்ட நிலைமைகளோடு காங்கிரஸ் தொழிலாளர்களை நம்பி வாழ்ந்த ஒரு காலம் உண்டு.

எவரெவரை நம்பி வாழ்கிறது காங்கிரஸ்?

"ஆனால் இப்போது அந்தக் காங்கிரஸ் ஏழைகளையா நம்பி வாழ்கிறது? அது நம்பி வாழ்வதெல்லாம் இராமநாதபுரம் இராஜாவையும் முத்தையா செட்டியாரையும், பட்டக்காரர்களையும் ஜமீன்களையும், இனம்களையும் மிட்டாமிராசுகளையும், டி. டி. கே. போன்ற வெள்ளைக்கார சோப்கட்டி ஏஜெண்டுகளையும்தான் நம்பி வாழ்கிறது.

'நெஞ்சிலே உரம் கொண்டவனே—போலீசாரின் தடியால் தாக்குண்டவனே வா வா—என்று அழைத்தக் காங்கிரஸ், இன்று அதே வாயால், 2 இலட்சம் பணம் கொழிக்கும் சீமானே காங்கிரசுக்கு வா வா—உன்னிடத்திலே பணம் இருக்கிறதா—என்று கேட்கிறது!

"இப்போது காங்கிரசில் சேருகிறவர்களிடம் கேட்கப்படுவது—'முச்சந்தியிலே அலைந்து திரிகிறாயா? கேலிகளையும் கிண்டல்களையும் பொறுத்துக் கொண்டாயா—போராட்டங்களிலே இரத்தம் சிந்தினாயா' என்பவை அல்ல; ஆனால், 'உன்னிடம் பணம் இருக்கிறதா?—செலவழிக்க முடியுமா?' என்பதுதான்.

எவ்வளவு காலத்திற்கு இது நீடிக்கும்?

"இப்படி பணக்காரர்களை வைத்துக்கொண்டு — தங்களிடம் இருக்கின்ற பணபலத்தை மட்டும் வைத்துக்கொண்டு கட்சியை நடத்தலாம் என்று முடிவு கட்டுகிறார்கள். இது எவ்வளவு காலத்திற்கு நீடிக்கும்? அந்தந்தக் கால நிலைக்கும்—மக்களிடையே பஞ்சமும் பசியும் பட்டினியும் இருக்கும்வரைதான் நிலைக்க முடியும்.

"அண்ணா அவர்கள் இதை நன்றாக எடுத்துக்காட்டியிருக்கிறார்—'காங்கிரசாரிடம் பணம் ஏராளமாக இருக்கிறது - ஒப்புக்கொள்கிறோம்; ஆனால் அந்தப் பணத்திற்குப் பலம் இல்லை' என்று!

அல்லல்படுவோரின் ஆருடக் கணிப்பு

"தேர்தலில் தி. மு. கழகம் 150 இடங்களில் போட்டியிடத் தன்னைத் தயார் செய்து கொண்டிருக்கிறது என்று தெரிந்ததுமே, மாற்றுக் கட்சியினர் நம்மைப்பற்றி ஆருடம் கணிக்க ஆரம்பித்துவிட்டார்கள். '150 பேர் போட்டியிடுகிறார்களாம்; இதில் ஒருவர் கூட வெற்றிபெற முடியாது' என்று கூறுகிறார்கள். அகில உலகக் கண்ணோட்டத்திலிருக்கும் எனது நண்பர் ஜீவானந்தம் கூறியிருக்கிறார் — 'இந்த 150 பேர்களில் ஒருவர்கூட வெற்றிபெற முடியாது' என்று! 'இவர்களுக்கு யார் இருக்கிறார்கள்?' என்று கேட்கிறார்கள் மாற்றுக் கட்சியினர்.

அன்னக்காவடிகளாம், நாம்!

அதே நேரத்தில் காங்கிரஸ், 'இவர்களால் என்ன செய்யமுடியும்? நம்மிடம் பணம் இருக்கிறது; அவர்களிடம் காசு ஏது? அங்கிருப்பவர்களெல்லாம் அன்னக் காவடிகளிலிருந்து தகரக் குவளைகள் வரைதான்' என்று கூறுகிறார்கள்.

"150 இடங்களில் போட்டியிடும் எங்களில் ஒருவர்கூட

(4-ம் பக்கம் பார்க்க)

★★★★★★★★★★★★★★★★★★★★

அறிவிப்பு

வரும் 13—1—57 ஞாயிறன்று 'நம் நாடு' தனி இதழ் ஒன்று வெளியிடப்படும். தேர்தல் பற்றிய முக்கியமான செய்திகள் இடம் பெறும்.

(ஆ-ர்)

★★★★★★★★★★★★★★★★★★★★

பர்மிய யூனியனிலிருந்து பிரிந்துவிட ஷான் மாநிலம் உரிமை கோருகிறது

சுதந்திரத் தனி அரசமைக்க மக்கள் ஆவல்

அரசியல் சட்டம் சுட்டிக்காட்டப்படுகிறது

இரங்கூன், சன. 8—

பர்மா யூனியனிலிருந்து தாங்கள் பிரிந்து செல்ல விரும்புவதாகக் கிழக்கு பர்மாவிலுள்ள ஷான் மாநில அரசியல் பிரதிநிதிகள் தெரிவித்திருக்கின்றனர் என்று இரங்கூன் பத்திரிகைகள் செய்தி வெளியிட்டிருக்கின்றன.

56,000 சதுரமைல் பரப்பளவுள்ள இந்த ஷான் மாநிலத்தில், சுமார் 15 இலட்சம் மக்களே வாழுகின்றனர்.

இவர்கள் பர்மா யூனியனிலிருந்து பிரிந்து செல்லலாம் என்ற உரிமையை பர்மிய அரசியல் சட்டமே வழங்கியிருக்கிறது

'ஷான் மக்கள் விரும்பினால், 1958-ம் ஆண்டிலேயே யூனியனிலிருந்து பிரிந்துவிடலாம்' என்று பர்மிய அரசியல் சட்டம் கூறுகிறது.

வரலாறு

பழங்காலந்தொட்டு, இந்த ஷான் மாநிலம் 'சாப்வாஸ்' என்றழைக்கப்படும் 'தலைவர்'களால் ஆளப்பட்டு வந்திருக்கிறது.

பிரிட்டிஷார் இந்த மாநிலத்தை ஒரு பெடரேஷனாக நிர்வகித்து வந்தனர்.

கோரிக்கை

வடக்கு ஷான் மாநிலத்தில் கடந்த வாரத்தில், ஷான் மக்களின் பிரதிநிதிகள் சுமார் 160 பேர்கொண்ட கூட்டம் ஒன்று சென்வி எனுமிடத்தில் நடைபெற்றதாகவும், அப்போது ஷான் ராஜ்யம் பர்மா யூனியனிலிருந்து பிரிந்துவிட வேண்டும் என்று கோரித் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டதாகவும் செய்திகள் கூறுகின்றன.

பிரிந்தால் வாழ்வு செம்மையாகும்

"நாங்கள் பர்மிய யூனியனிலிருந்து தனித்து வாழ்வதினால் எங்கள் வாழ்வு இப்போதைவிட நன்றாக இருக்கும்" என்றும் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதிகாரத்தை விடோம்

'சாப்வாஸ்' என்ற தலைவர்கள் தங்களுடைய பரம்பரை நிர்வாக அதிகாரத்தைக் கைவிட்டுவிடக் கூடாது என்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டிருக்கிறது.

'பர்மிய சர்க்கார், இந்தத்தலைவர்கள் தங்களுடைய அந்தப் பரம்பரை அதிகாரத்தைக் கைவிட்டுவிடவேண்டுமெனப் பல ஆண்டுகளாகக் கோரி வந்திருக்கின்றனர்' என்றும் பத்திரிகைகள் தெரிவிக்கின்றன.

ஷான் மாநிலம், பர்மிய யூனியனிலிருந்து விடுபட்ட சுதந்திரத் தனியரசாக மலர வேண்டுமென்பதில் ஷான் மக்கள் மிகுந்த ஆவல் கொண்டுள்ளனர் எனத் தெரிகிறது.

நம் நாடு
தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன்
சென்னை 9—1—'57 புதன்

இந்தூர் இதோபதேசம்!

நமது கழகம் தோன்றிய நாளிலிருந்து இன்றுவரை, தமிழ் நாட்டு அரசியல்வாதிகளுக்கு மட்டுமின்றி, பொதுவாக இந்தியத் துணைக்கண்டத்து அரசியல்வாதிகளுக்கும் வழிகாட்டும் வகையில், தனது இலட்சியங்களையும் கொள்கைகளையும் பிரச்சாரம் செய்யும்போது, கண்ணியம் குறையாமல் நடந்துவந்திருக்கிறது என்பதைக் கழகத்தை அறிந்தோர் உணருவர். தனது கொள்கைகளைப் பறைசாற்றும்போதும் மாற்றாரின் கொள்கையில் உள்ள கோணல்களை விளக்கும்போதும், கொள்கைகளை விமர்சிக்கும்போதும், முதல்தரமான நாகரீகமான முறைகளையே கையாண்டு வந்திருக்கிறது, நமது கழகம்.

எந்தக் குற்றச்சாட்டை வேண்டுமானாலும் மாற்றார், கழகத்தின்மீது சுமத்தலாம்; ஆனால், 'கண்ணியக் குறைவாகக் கழகத்தவர் நடந்துகொண்டனர்' என்று மட்டும் கூறிடவே முடியாது. 'தாக்குவர், தாங்கிக் கொள்ளுங்கள்; ஏசுவர், தாங்கிக்கொள்ளுங்கள்; பழி சுமத்துவர், பதட்டப்படாதிர்; சுருங்கக் கூறின் எதையும் தாங்கும் இதயம் உங்களுக்கு வேண்டும்; கடமை, கட்டுப்பாடு, கண்ணியம்—இவையே உங்களுக்குக் கவசங்கள்' என்ற நமது அண்ணாவின் பொன்மொழிகளைத் தாரக மந்திரமாக ஏற்றுத் தங்களின் ஒவ்வொரு சிறு நடவடிக்கையிலும், கழகத் தோழர்கள், கண்ணியத்தைக் கண்ணிமை போலக் காத்து வந்திருக்கின்றனர் என்பதைத் தமிழ் நாடு நன்கறியும்.

ஆனால், மாற்றார்—குறிப்பாகக் காங்கிரசில் சிலர், கழகத்தவரைத் தனிப்பட்ட முறையில் ஏசுவதையும், இழித்தும் பழித்தும் பேசுவதையுமே தொழிலாகக்கொண்டுள்ளனர். கழகத்தில் உள்ள முன்னணி வீரர்களில் முக்கியமான சிலரைப் பற்றிய பூத பௌதிக ஆராய்ச்சியே, தங்களுடைய இமாலயத் தவறுகளையும் பெருங்குறைகளையும் மக்கள் கண்ணிலிருந்து மறைப்பதற்குப் போதுமானதென்று கருதி வந்திருக்கின்றனர். கழக முக்கியஸ்தர்களைப் பற்றித் தனிப்பட்ட முறையில், மிகமிகத் தரக்குறைவான — நாலாந்தரமான வார்த்தைகளால் ஏசி வருவதையும் தாங்கிக்கொண்டு தான்—'பாவம், இந்த வார்த்தைகளை உபயோகித்துத் தமிழின் நறுமணத்தைக்கெடுக்கின்றனரே!' என்று சமாதானங் கூறிக்கொண்டுதான் கழகம் வளர்ந்திருக்கிறது—வளர்ந்துகொண்டிருக்கிறது. இந்தக் கண்ணியத்திற்கு முதலிடம் தரும நடைமுறையிலிருந்து, எத்தனைதான் ஆத்திரமூட்டப்பட்டாலும் — எத்தனை பெரிய பழி சுமத்தப்பட்டாலும், கழகத்தோழர்கள் கிஞ்சிற்றும் வழுவமாட்டார்கள். தேர்தல் நெருங்க நெருங்க, நமது மாற்றார்—காங்கிரசார் மட்டுமின்றி முற்போக்காளர் என்று கூறித்திரியும் வேறு சிலரும்கூட, நமது கழகத்தைப் பற்றியும் அதனை வழிநடத்திச் செல்பவர்களைப்பற்றியும், தரக்குறைவான பிரச்சாரத்தில் ஈடுபட்டு வருவதுபற்றி நாம் அறிவோம். தேர்தல் இன்னும் சமீபிக்கும்போது, அந்த மாற்றாரின் பிரச்சாரத்தின் தரம், இன்னும் கீழிறங்கலாம். ஆனாலும்கூட, கண்ணியத்தின் காவலர்களான கழகத் தோழர்கள், முன்னைவிட இப்போது இன்னும் அதிகமாகக் கண்ணியம் காப்பதில் கவனம் செலுத்துவரே தவிர, மாற்றாரின் வம்புக்கு இழுக்கும் வலையில் வீழ்ந்து, தங்கள் கௌரவத்திற்கு இழுக்குத் தேடிக் கொள்ளமாட்டார்கள் என்பதை, அத்தகு இழி தன்மையான பிரச்சாரத்திலீடுபட்டிருப்போருக்குத் தெரிவித்துக் கொள்கிறோம்.

காங்கிரசார், கடந்த காலத்தில் எதிர்க்கட்சியினரைப் பற்றி தனிப்பட்ட முறையில் தவறாக — தரக்குறைவாகப் பேசிவந்திருக்கின்றனர் என்பதை ஒப்பும் வகையில், 'இனி அப்படிச் செய்யாதீர்' என்று இந்தூர் மாநாட்டில் இதோபதேசம் செய்யப்பட்டிருக்கிறது! ஆனால் இந்த இதோபதேசம், தமிழ் நாட்டுக் காங்கிரசார் செவிகளில் விழுகிறதோ என்னவோ?

வேறு வடநாட்டுப் பகுதிகளில் உள்ள காங்கிரசாருக்காவது, 'காங்கிரசின் சாதனை'கள் என்று சொல்லிக்காட்ட சில பல உள்ளன.

ஆனால் பாவம், தமிழ் நாட்டுக் காங்கிரசாருக்கு என்ன இருக்கிறது? இந்த நிலை அவர்களுக்குத் தரும் வேதனையும் ஆத்திரமும் சேர்ந்துதான், கழகத்தின் குற்றச்சாட்டுகளை மறுத்துரைக்க வழி இல்லாத போது, கழகத்தவரைப் பற்றித் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேச முற்படுகின்றனர். அதன் மூலம் தங்களது, மக்களுக்கு வாழ்வளிக்க இயலாத கையாலாகாத்தனத்தை மூடி மறைக்க முயற்சிக்கின்றனர் — தாங்கள் மக்களுக்குச் செய்துள்ள துரோகங்களுக்குத் திரையிட எத்தனிக்கின்றனர். மக்களிடத்தில், இந்த நாட்டுக் காங்கிரசார் பேசுவதற்கென்று நம்மைப் பற்றித் தயாரித்து வைத்துள்ள தனிப்பட்டோரைத் தாக்கும் புராணத்தையும் மேலிடத்தவர் 'தடை' செய்துவிட்டால் என்னதான் கூறுவரோ, மக்களிடத்தில்? பாவம்; பரிதாபத்திற்குரியவர்கள்! எனவே இந்தூர் இதோபதேசத்தைத் தமிழ் நாட்டுக் காங்கிரசார் ஏற்பர் என்பது ஐயப்பாட்டிற்குரியதே!

தூய நோக்கோடு இந்தூர் இதோபதேசம் இருக்குமானால் காங்கிரசார் மட்டுமின்றி, அந்த உபதேசத்திற்குத் தமிழ் நாட்டில் உள்ள வேறு சில முற்போக்காளரும் செவி மடுப்பது நல்லது.

நம்மைப் பொறுத்தவரை, எத்தனைதான் இழித்துரைக்கப் பட்டாலும்—தனிப்பட்ட முறையில் தரக்குறைவாகத் தாக்கப்பட்டாலும்—ஆத்திரமூட்டப்பட்டாலும் கண்ணியம் காக்கும் நடைமுறையிலிருந்து வழுவமாட்டோம் என்பது மட்டும் உறுதி.

இரக்கமற்ற நெஞ்சத்தினர் மீண்டும் ஆட்சியிலிருக்க வேண்டுமா?

போலி வாதம் பேசும் 'அரசியல் மேதை'கள் பற்றி தோழர் ஈ.வெ.கி. சம்பத் எச்சரிக்கை

தங்களுடைய திறமைக் குறைவால் நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டதுமல்லாமல், தமிழகத்திற்கு இழைக்கப்படும் அநீதிகளைச் சுட்டிக்காட்டிக் கேட்கும் நம்மை, உளுத்துப்போன வாதங்களால் ஆபாசப்படுத்த நினைக்கும் சில 'அரசியல் மேதாவி'களின் போக்கை விளக்கி தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்கள், சென்னை 4-வது வட்டம் இளைஞர் முன்னேற்ற மன்றச் சார்பில் நடைபெற்ற தி. மு. கழகத் தேர்தல் நிதியளிப்புக் கூட்டத்தில் ஆற்றிய சொற்பொழிவின் இரு பகுதிகள் முன்னரே வெளியாகியுள்ளது; மற்றுமோர் பகுதி இங்கு தரப்படுகிறது :—

திட்டங்களினால் நாடு குட்டிச்சுவராகிவிடுமா?

ஒரு நாட்டுக்குத் திட்டம் போட — நாட்டின் முன்னேற்றத்திற்கான திட்டம் போட ஏதாவது வரம்புண்டா? கிடையாது. வாழ்க்கைத் தரத்தில் இந்தியாவைவிட 30, 40 மடங்கு அதிகமாக இருக்கிற அமெரிக்காவில் இன்னும் திட்டங்களைப் போட்டுக்கொண்டு தான் இருக்கிறார்கள்; அது போலவேதான் ரஷ்யாவிலும் இன்னும் பலப்பல அணைக்கட்டுத் திட்டங்கள் நடைபெற்றுக்கொண்டு வருகின்றன. இந்த உலகத்தில் மனித சமுதாயம் இருக்கும்வரை, உள்ளதை உயர்த்திவிட மேலும் மேலும் திட்டங்கள் வளரத்தான் செய்யும். 'இதற்குமேல் இங்கு திட்டங்கள் தீட்டினால் நாடு சுடுகாடாகிவிடும்' என்று யாரும் கூறமாட்டார்கள்.

"நம்மிடையே இப்போதிருக்கிற கேள்வி எல்லாம் திட்டம் போட முடியுமா என்பதல்ல! 'திட்டம் தேவைதான்; ஆனால் அதற்கான பணத்தை எங்கிருந்து பெறுவது?' என்று கேட்டாலாவது பொருளுண்டு

வளமுள்ள திட்டங்கள் வடக்கிற்கு மட்டும் ஏன்?

"இந்த நாட்டிற்கு ஏன் 2,000 கோடி ரூபாய்க்குத் திட்டம் தீட்ட உரிமை கிடையாது? நீங்கள்தானே கூறுகிறீர்கள் — 'இமயம் முதல் குமரிமுனைவரை ஒரே நாடு'— என்று! ஆனால் ஒரு குடும்பத்தில் ஒரு பிள்ளை மட்டும் பலவீனமாக இருப்பானேன்? இந்த நாடு ஒரே நாடு என்றால், 100-க்கு 75 சதவிகிதம் உற்பத்தியும் வடநாட்டிலேயே இருப்பானேன்? மேலும் மேலும் தொழில்வளத்திற்கான திட்டங்கள் அனைத்தும் வடநாட்டிலேயே அமைவானேன்? ஏற்கனவே தென்னாடு தேய்ந்து கிடக்கிறது. 'தெற்கே இருப்பவர்களின் உயிர் ஊசலாடிக்கொண்டிருக்கும் போது, அவர்களை உயிரூட்டிவிட்டு பிறகு எல்லோரும் கைகோர்த்து நடப்போம்—பாரதம் பற்றிப் பேசுவோம்' என்று ஏன் பேசக் கூடாது?

பலவீனத்தைப் பயன்படுத்துகிறார்களே!

"சாதாரணமாகக் குடும்பங்களில் பலவீனமாக இருக்கும் குழந்தைகளுக்குத்தான் அதிகமாகச் செலவு செய்வார்கள். குடும்பப் பாசம்—குடும்ப அமைப்பு என்றால், பலவீனமாக இருப்பவர்கள் நல்ல நிலை பெற்று அவர்கள் ஆரோக்கியத்திற்கும் வலிவுக்கும் மற்றவர்கள் தியாகம் செய்வார்கள் ஆனால் இந்த 'இந்தியக் 'குடும்பத்'தில இதைக் காணோமே? இங்கு ஏற்கனவே பலவீனப்பட்டுக் கிடக்கும் மதனாட்டை வடநாட்டார் சுரண்டுகிறார்கள் என்றால் என்ன பொருள்?

பொறுப்புணர்ச்சியுடன் பேசுகிறார்களா?

"மிகச் சாதாரணமான பிரச்னை—தமிழ் நாட்டுக்குத் தமிழ் நாடு என்று பெயரிடுவது; இதை ஏதோ திராவிட முன்னேற்றக் கழகத்தவர் மட்டும்தான் கேட்கின்றனர் என்று நினைத்துக் கொண்டே அமைச்சர் சுப்பிரமணியம் பதில் கூறுகிறார்—'தமிழ் நாட்டுக்குத் தமிழ் நாடு என்று பெயரிடுவது ஒன்றும் பிரமாதமானதல்ல; ஆனால் நாம் அப்படிச் செய்யாதிருப்பதற்கு வடநாட்டு ஏகாதிபத்தியத்தின் சூட்சிதான் காரணம் என்று அவர்கள் நினைத்துக்கொண்டிருக்கிறார்கள்; தமிழ் நாடு என்று பெயரிடும் அதிகாரம் எங்களிடம்தான் இருக்கிறது; பின் ஏன் செய்யவில்லை? இவர்கள் சொல்லி நாம் செய்வதா? அதனால் தான்,'—என்ற பாணியில்—பள்ளிக்கூடத்துப் பையன்கள் பேசும் பாஷையில் பேசியிருக்கிறார்!

'இதிலே அடங்கியிருக்கும் அரசியல் அறிவும் பொறுப்புணர்ச்சியும் எப்படிப்பட்டது என்பதைப் பொதுமக்களாகிய நீங்களே தீர்மானித்துக் கொள்ளுங்கள் என்று கேட்டுக் கொள்வேன்.

மறந்து கேலி பேசும் 'அரசியல் மேதை'கள்!

"'திராவிட முன்னேற்றக் கழகம் பொறுப்பு வாய்ந்த அரசியல் கட்சி அல்ல; அது டிராமா, சினிமா கட்சி,' என்று அந்த 'அரசியல் மேதை'கள் நம்மைப் பற்றிக் கூறியிருக்கிறார்கள். உலகில் எந்தக் கட்சியில்தான் கலைஞர்கள் இல்லை? எல்லாக் கட்சியிலும் கலைஞர்கள் இருக்கிறார்கள். நம்மிடம், மக்களின் உள்ளத்தைக் கவர்ந்த கலைஞர்கள் இருக்கிறார்கள்.

"இந்த நாட்டில் காங்கிரஸ் உலவுவதற்குக் காரணமாக இருந்தவர்கள் யார்? காந்தியாருக்கு அடுத்த படியாகச் சத்தியமூர்த்தியும், கே. பி. சுந்தராம்பாள் என்ற அம்மையாரும்தான்! நன்றி கெட்டக் காங்கிரசார் வேண்டுமானால் இதை மறந்திருக்கலாம்

"கலைஞர்களின் முந்தானையைப் பிடித்துக்கொண்டு நாட்டு மக்களிடம் சென்று ஓட்டுக் கேட்டவர்கள் தான், இன்று நம்மைப் பார்த்து நடிகர்கள் என்று குறை கூறுகிறார்கள்—விதவை, கன்னியைப் பார்த்துக் கேலி செய்வதுபோல!

"இதையெல்லாம் தெரிந்துகொண்டிருப்பதால்தான் இவர்களுடைய மானம் சந்தி சிரிக்கும் வகையில், அண்மையில் நடைபெற்ற அகில இந்தியக் காங்கிரஸ் ஊழியர் கூட்டத்தில் பேசின நேரு பண்டிதர், 'அரசியல் துறைமட்டும் அல்லாமல், வேறு ஏதாவது பிழைப்பதற்குக் கௌரவமான தொழில் வைத்திருப்பவர்கள் மட்டும் அரசியலில் வாருங்கள்' என்று கூறியிருக்கிறார். அப்படிக் கூறியிருப்பவரைப் பின்பற்றிக் கொண்டிருப்பவர்கள்தான் வேறு ஒரு தொழிலில் ஈடுபட்டிருக்கும் மக்களைப் பார்த்துக் கேலி பேசுகின்றனர்!

"எனவே, அரசியல் துறையில் ஈடுபட்டவர்கள் வேறு தொழில்களில் ஈடுபடுவது பலவீனமல்ல; அது தேவையானதுதான் என்பதை நேரு பண்டிதர் விளக்கியிருக்கிறார். எனவேதான், காலை முதல் இரவு வரை உண்ணுவதைத் தான் தங்கள் தொழிலாகக் கொண்டில்லாமல் வேறு ஏதாவது ஒரு தொழிலையும் தெரிந்துகொள்ளச் சொல்கிறார் காங்கிரஸ்காரர்களை நேரு பண்டிதர்!

"திராவிட முன்னேற்றக் கழகம் நல்ல நடிகர்களையும், கலைஞர்களையும், அரசியல், பொருளாதாரத் துறையில் தேர்ச்சி பெற்றவர்களையும், இசைவாணர்களையும், திறமை மிக்க ஓவியர்களையும், சிற்பிகளையும், குத்துச் சண்டையில் தேர்ந்தவர்களையும்—இப்படி வாழ்க்கையின் பல்வேறு துறைகளிலும் திறமை பெற்றவர்களைக் கொண்டு விளங்குகிறது. இங்கு அரசியலை மட்டும் நம்பித்தான் வாழவேண்டுமென்ற நிலையில்இருப்பவர்கள் யாருமில்லை.

அந்தக் குரல் இங்கு மட்டும் கேட்பானேன்?

"இலங்கைப் பிரதமராக இருக்கும் பண்டார நாயகாவும் கதைகள் எழுதுவார்-அதுவும்மாமக்கதைகள்! மாமக் கதைகள் என்றால் என்ன என்பது உங்களுக்கெல்லாம் தெரியும். அவர் அண்மையில் காமன் வெல்த் மாநாட்டை யொட்டி இலண்டனுக்குச் சென்றிருந்த போது வெறுங்கையோடு போகவில்லை—தாம் எழுதின 4 மர்மக் கதைப் புத்தகங்களையும் எடுத்துச் சென்றார். ஏன்? அங்குள்ள கம்பெனிமூலம் அவைகளைப் பிரசுரம் செய்வதற்காகத்தான். 'இவர் என்ன மர்மக் கதைகள் எழுதுகிறாரே; இவர் அரசியலில் இருக்கலாமா?' என்று இலங்கையில எந்தப் புத்திசாலியும் கேட்கவில்லை; எந்தக் காமராசரும் கேட்கவில்லை. ஆனால் இங்கே கேட்கிறது அந்தக் குரல்!

'இப்படி சொத்தையான வாதங்களையும் உளுத்துப்போன வாதங்களையும் கூறி நம்மை ஆபாசப் படுத்திவிட நினைக்கிறார்களே தவிர அறிவுடனும் நீதியோடும் நேர்மையோடும் தர்க்கரீதியாக நமது கொள்கைகளையும் கோட்பாடுகளையும் இலட்சியங்களையும் எதிர்த்துப் பேசுவார் யாரையும் காணோம்.

"ஐந்தாண்டுத் திட்டங்களிலே நமக்கு இழைக்கப்பட்டிருக்கிற அநீதிகளை இதுவரையிலும் எடுத்துக்காட்டினோம். அதற்கு இன்றுவரையில் வகையான ஒரு பதில் கூடக் கிடைக்கவில்லை; ஆனால் மாறாகப் பொறுப்பற்றக் குற்றச்சாட்டுகளையும் போலி வாதங்களையும் கூறிவருகின்றனர்.

"தங்களுடைய திறமைக் குறைவால் தேவிகுளத்தையும், பீர்மேட்டையும் பறிகொடுத்துவிட்டு, வகையற்று—திறனற்று, தங்களுடைய கையாலாகாத்தனத்தால் இந்த நாட்டைக் காட்டிக் கொடுத்துவிட்டு, நம்மிடம் வந்து கைவரிசையைக் காட்டுகிறார்கள்! நம்மீது தப்பாக்கிப் பிரயோகம் செய்கிறார்கள்—தடியடிப்பிரயோகம் செய்கிறார்கள். இவைகளுக்கெல்லாம் நமக்கு நல்ல பதில் கிடைத்தாக வேண்டும்.

"தமிழ் நாட்டிற்கு 'தமிழ் நாடு' என்று பெயரிடவேண்டுமென்பதற்காக சங்கரலிங்கம் என்ற பெரியவர் செத்தார். ஏன் செத்தார் தெரியுமா? திருச்சியில் அதற்கான காரணத்தைக் கூறியிருக்கிறார் காமராசர்—'அவர் சாப்பிடவில்லை; எனவே செத்துப்போனார்' என்று! இப்படி நெஞ்சிலே ஈரம் கொஞ்சம் கூட இல்லாதவர்கள்தான் இப்போது மீண்டும் தங்கள் கட்சி ஆட்சியிலிருக்க மக்களிடம் 'லைசென்சு' கேட்கிறார்கள்!"

[பேச்சு முடியவில்லை;
தொடர்ந்து வெளிவரும்]

'காங்கிரசுக்கு ஓட்டுப் போடாதீர்'

'பதவி வேட்டையாடும் பச்சோந்திகளைக் கண்டு ஏமாறாதீர்'

தாழ்த்தப்பட்டோருக்கு ஏ. இரத்தினம் வேண்டுகோள்

சென்னை, சன. 8—

"தேர்தல் காலம் நெருங்கிவிட்டது. 'காங்கிரசுக்குத் தாழ்த்தப்பட்ட மக்கள் ஓட்டுப் போடக்கூடாது; பௌத்த தர்மத்தைப் பரவச் செய்யவேண்டும்' என்பதே அண்ணல் அம்பேத்கார் அவர்களிட்ட கட்டளை. அவர் விட்டுச்சென்ற அப்பணியைத் தாழ்த்தப்பட்ட மக்கள் அனைவரும் தொடர்ந்து பிரச்சாரம் செய்யவும் செயலாற்றவும் கேட்டுக்கொள்கிறேன்"

—என்று, தமிழ்நாடு தாழ்த்தப்பட்டோர் பெடரேஷன் தலைவரான திரு. ஏ. இரத்தினம் எம்.எல்.ஏ., அவர்கள் தாம் வெளியிட்டுள்ள அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டிருக்கிறார்.

அவ்வறிக்கையில் மேலும் அவர் 'சென்னை, வேலூர் போன்ற இடங்களில், நம்மில் ஒரு சிலர்—இதுவரை அம்பேத்கார் அவர்களாலோ, அ. இ. தா. பெடரேஷனாலோ அங்கீகரிக்கப்படாதவர்கள் பெடரேஷனுக்குப் போட்டி நிறுவனம் என்று வாயளவில் பேசித் திரிகின்றனர்; பதவி வேட்டையாடும் இவர்களைக் கண்டு மக்கள் ஏமாந்துவிடக் கூடாது' என்றும் கேட்டுக்கொண்டிருக்கிறார்.

அம்பேத்கார் விட்டுச்சென்ற கல்வி, பௌத்த மதக் கொள்கை, அரசியல் ஆகிய சம்பந்தமான பிரச்சினைகளைக் கவனிக்க, தாம் உட்பட ஏழு பேர் கொண்ட குழு ஏற்படுத்தப்பட்டுள்ளதாகவும், அம்பேத்கார் மறைவுக்குப் பின் வடநாட்டில் இலட்சக்கணக்கில் மக்கள் தினம் தினம் இந்து மதத்தை விட்டு வெளியேறி பௌத்த மதத்தில் சேருகின்றனர் என்றும், கடந்த மாதம் 23-ந் தேதி நடைபெற்ற தமிழ்நாடு பெடரேஷன் மாசபைக் கூட்டத்தில், இவ்வாண்டு ஏப்ரல் 14-ந் தேதி (அம்பேத்கார் பிறந்த நாள்) தமிழ்நாட்டில் 3 இலட்சம் மக்களை மதம் மாற்றச் செய்வதென முடிவு செய்திருப்பதாகவும் வெளியிட்டிருக்கிறார்.

மேலும் அவ்வறிக்கையில், அம்பேத்கார் மறைவில் சில சந்தேகங்களும் கலக்கமும் தோன்றியுள்ளன என்றும், அவரது மறைவு குறித்து உடனடியாக சர்க்கார் விசாரணை நடத்த வேண்டுமென்று மகாசபை கேட்டுக்கொண்டுள்ளதென்றும் குறிப்பிட்டிருக்கிறார்.

கடந்த 1—1—57-ல் நடைபெற்ற அகில இந்திய தாழ்த்தப்பட்டோர் பிரதிநிதிகள் மகாசபையில் திரு. பி. டி. கோபராகடே தலைவராகவும், திரு. அவாலே பொதுச்செயலாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கின்றனர்.

இத்திங்கள் 27-ந் தேதியன்று அம்பேத்கார் அவர்களது அஸ்தி சென்னைக்கு எடுத்துவரப்பட்டு, ஊர்வலமாகச் சென்று கடற்கரை அடையும் என்றும், பின்னர் நடைபெறும் அனுதாபக் கூட்டத்தில் சர்வகட்சியினரும் கலந்துகொள்வர் என்றும் அறிவித்திருக்கிறார்.

வர்த்தகர்கள் சங்கம்

தேர்தலில் ஏழு தொகுதிகளில் போட்டியிடுமாம்

சென்னை சட்டசபைக்கு ஆரணி, மாயூரம், தர்மபுரி, சேலம் டவுன், காஞ்சீபுரம், திண்டுக்கல், கோயில்பட்டி ஆகிய ஏழு தொகுதிகளிலும் டில்லி பாராளுமன்றத்திற்கு நாமக்கல், ஸ்ரீவில்லிபுத்தூர் ஆகிய இரண்டு தொகுதிகளிலும் போட்டியிட தமிழ் நாடு வர்த்தகர் சங்கம் முடிவு செய்துள்ளதாகத் தெரிய வருகிறது.

'நடிகர்கள் நாள்' விழா

தென்னிந்திய நடிகர் சங்க முடிவு

சென்னை, சன. 8—

இந்தியப் பேசும் பட வெள்ளி விழாக் கொண்டாட்ட வாரத்தில் ஒரு நாளை, 'நடிகர்கள் நாளா'கக் கொண்டாடுவதென்றும், அந்த விழாவை, வருகிற 13-ந் தேதி அன்று, சென்னையில், இந்தியன் பைன் ஆர்ட்ஸ் சொஸைட்டியார் அமைத்துள்ள விசேடப் பந்தலில் தலைவர் திரு. என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் கொண்டாடுவதெனவும், கடந்த 5-ந் தேதியன்று இங்கு நடைபெற்ற தென்னிந்திய நடிகர் சங்கச் செயற் குழுவின் அவசரக் கூட்டம் ஒன்றில் முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

அக்கூட்டத்தில், தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையிலிருந்து வந்த கடிதம் படித்துக் காட்டப்பட்டது.

அவ்விழாவை நடத்த என். எஸ். கிருஷ்ணன், எம். ஜி. இராமச்சந்திரன், எஸ். எஸ். இராசேந்திரன் ஆகியோரை முறையே தலைவர், செயலாளர்களாகவும், மற்றும் கே. சுப்பிரமணியம், எஸ். வி. சகஸ்ரநாமம், டி. கே. சண்முகம், டி. வி. சுந்தரம், என். எஸ். நாராயணபிள்ளை, புதுநேரி-ரா. சுப்பிரமணியம், தோழியர்கள் டி. ஏ. மதுரம், பி. ஆர். சுலோசனா-பரமசிவம், எஸ். டி. சுப்புலட்சுமி, ஜி. டி. இராசகாந்தம் ஆகியோரை உறுப்பினர்களாகவும் கொண்ட குழு ஒன்றும் அமைக்கப்பட்டது.

ஆச்சாரியார் தலைமை தாங்குவாரா?

பாட்னா, சன. 8—

பீகார் மாநிலத்தில் பொதுத் தேர்தலுக்கான காங்கிரஸ் அபேட்சகர்களை அதிகாரபூர்வமாக மேலிடம் அறிவித்தவுடன், பழைய காங்கிரஸ்காரர்கள் ஒன்றுகூடி, வரும் பொதுத் தேர்தலில் காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்ப்பதென முடிவு செய்துள்ளனராம்.

இடதுசாரிக் கட்சிகளுடன் கூட்டணியும் அமைக்க முயற்சிகள் நடைபெற்று வருகின்றனவாம்.

வரும் சனவரியில் காங்கிரஸ் மீது வெறுப்புகொண்டவர்களின் மாநாடு கூட்டப்படும் என்றும், அதற்கு ஆச்சாரியார் தலைமை தாங்கக்கூடுமெனவும் தெரியவருகிறது.

எங்கள் வேட்டை முடிந்து விட்டது

நாட்டைப்பார்க்க நீங்கள் வாருங்கள்

மாஸ்கோ, சன. 6—

ஐ. நா. பாதுகாப்புச் சபை பொதுச்செயலாளர் ஹாமர்ஸ்க்ஜோல்டை, இவ்வாண்டு வசந்த காலத்தில் தமது நாட்டுக்கு வருமாறு ஹங்கேரி சர்க்கார் அழைப்பு விடுத்திருக்கிறதாம்.

புடாபெஸ்டில் நடைபெற்ற பத்திரிகையாளர் மாநாடொன்றில் மேற்கண்ட அழைப்பைத் தெரிவித்த ஹங்கேரிய வெளிநாட்டமைச்சர், 'ஹங்கேரிக்கு ஐ. நா. பார்வையாளர்களை அனுமதிக்க வேண்டும் என்று சில மேற்கத்திய நாடுகள் கேட்டுக்கொண்ட நேரத்தில் ஐ. நா. பார்வையாளர்களை இங்கு அனுமதித்திருந்தால், இங்குள்ள ஹங்கேரிய மக்களின் உள்நாட்டு விவகாரங்களில் தலையிடுவதாக அது அமைந்திருக்கும்' என்று குறிப்பிட்டாராம்!

ஹங்கேரிச் சம்பவங்களை ஒட்டி நாட்டைவிட்டு வெளியேறிய மக்களையெல்லாம் மீண்டும் தங்கள் தங்கள் நாடு திரும்புவதற்கு உதவுவதாகவும், நாட்டைவிட்டு மொத்தம் 1,50,000 மக்கள் வெளியேறினதில், சுமார் பாதிப்பேர் வரை ஆஸ்திரியாவில் இருக்கின்றனர் என்றும், அவர்களில் சுமார் 10,000 பேர் ஹங்கேரிக்குத் திரும்பிவிட்டனர் என்றும், இன்னும் ஏராளமான மக்கள் திரும்பிக்கொண்டிருக்கின்றனர் என்றும், திரும்பி வர விரும்பும் மக்களின் தொகை நாளுக்கு நாள் அதிகரித்துவண்ணம் இருக்கிறது என்றும் அவர் குறிப்பிட்டிருக்கிறார்.

பண்டிதரின் குழப்பம்?

உரிமை வழங்குவதிலும் உறுதியற்ற நிலைமையா?

'இந்து மாதர்களின் சொத்துரிமை, வாரிசுரிமை, திருமணம் ஆகியவைபற்றி இந்தியப் பாராளுமன்றத்தில் பல சட்டங்கள் உருவாக்கப்பட்டுள்ளன; இந்தச் சட்டங்கள் இந்தியா முழுமையிலுமுள்ள எல்லாப் பெண்களுக்கும் பொருந்துவதாக இருக்கவேண்டும்; ஆனால், பிறமீது பலாத்காரமாக எதையும் திணிக்க விரும்பவில்லை' என்று பண்டித நேரு, காங்கிரஸ் மகாசபைக் கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டிருக்கிறார்.

அரூர் ஊராண்மைக் கழகத்தில் அண்ணா, நடராசன் இருவருக்கும் வரவேற்பு

அரூர் (சேலம் மாவட்டம்) ஊராண்மைக் கழகத்தவர், அண்ணா அவர்களுக்கும், என். வி. நடராசன் அவர்களுக்கும் 29—12—56 அன்று மாலை 7 மணியளவில் கழக அலுவலகத்தில் ஒரு சீரிய வரவேற்பு அளித்தனர்.

இந்த வரவேற்பு விழாவை ஒட்டி ஊர்முழுவதும் அலங்கரிக்கப்பட்டிருந்தது என்பதுடன் ஊராண்மைக் கழக அலுவலகம் விசேடமாக தோரணங்களாலும், வரவேற்பு வளைவுகளாலும் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

வரவேற்பு

அண்ணா அவர்களும் நடராசன் அவர்களும் கழகம் வந்து சேர்ந்த போது, நகரசபைத் தலைவர் இருவருக்கும் மாலையிட்டு வரவேற்றார்.

ஊராண்மைக் கழக உறுப்பினர்கள், நிர்வாக அதிகாரி உள்ளூர் பிரமுகர்கள் ஆகியோருடன், அண்ணா அவர்களும், என். வி. நடராசன் அவர்களும் ஊராண்மைக் கழகம் தந்த தேநீர் விருந்தொன்றில் கலந்து கொண்டனர்.

வரவேற்பு இதழ்

பின்னர், கழக மண்டபத்தில் தலைவர், அண்ணா அவர்களுக்கும் என். வி. நடராசன் அவர்களுக்கும் வரவேற்பு இதழ்கள் வாசித்தளித்ததை ஏராளமான மக்களும் கழகத் தோழர்களும் கண்டு களித்தனர்.

நன்றி

தங்களுக்கு அளிக்கப்பட்ட நல்வரவேற்புக்கு நன்றி தெரிவித்து, அண்ணா அவர்களும் நடராசன் அவர்களும் நன்றி தெரிவித்து சிறிது நேரம் பேசினர்.

நிர்வாக அதிகாரி, விழாவிற்கு வந்திருந்தோர் அனைவருக்கும் நன்றிகூற, விழா இனிது முடிந்தது.

இந்த வரவேற்பு வைபவத்தில் தோழர் ஈ. வெ. கி. சம்பத் அவர்களும் கலந்துகொண்டார். (ந-கி.)

ஆசிரியர்களின் ஊதியம் உயருகிறது!

உத்திரப் பிரதேச மாநிலத்தில் உள்ளாட்சிக் கழகங்களால் நடத்தப்படும் ஜூனியர், சீனியர் ஆதாரப் பள்ளி ஆசிரியர்களின் அடிப்படை ஊதியத்தை அரசாங்கம் உயர்த்தியிருக்கிறது.

திருச்சியிலும் மத்திய சர்க்கார் ஊழியர் சம்பள மறுப்புப் போராட்டம்

திருச்சி, சன. 7—

விலைவாசிகளைக் கட்டுப்படுத்தவும், நியாய விலைக் கடைகளை அதிகமாகத் திறக்கவும், 2-வது சம்பளக் குழு நியமிக்கவும், வாழ்க்கைத்தரப் புள்ளிக்கேற்றவாறு தங்களுக்குத் தரப்படும் கிராக்கிப் படியை உயர்த்தவும் மத்திய சர்க்காரைக் கேட்டுக்கொண்டு, இங்கு நடைபெற்ற மத்திய சர்க்கார் இலாகா ஊழியர்கள் பொதுக் கூட்டம் ஒன்றில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருக்கிறது.

திருச்சியிலுள்ள தபால், தந்தி, விமானப் போக்குவரத்து, வானிலை ஆராய்ச்சி, சி. பி. டபிள்யூ. டி இலாகா ஊழியர்கள் அனைவரும், கடந்த 2-ந் தேதி சம்பளம் வாங்க மறுத்துவிட்டிருக்கின்றனர்.

அன்று மாலை திருச்சி இரயில் நிலையத்திலிருந்து, நகரிலுள்ள எல்லா மத்திய சர்க்கார் தொழிலாளர்களும் ஒன்றுகூடி ஒலி முழக்கங்களுடன் ஊர்வலமாக வந்து டவுன்ஹால் திடலை அடைந்தனர். அங்கு நடைபெற்ற பொதுக் கூட்டத்தில் மேற்கண்டவாறு தீர்மானம் நிறைவேற்றப்பட்டதுடன், மத்திய சர்க்கார் ஊழியர்களின் கோரிக்கைகளை ஆதரித்தும், பொதுமக்கள் அவர்களுக்கு ஆதரவு தருமாறு கேட்டுக்கொண்டும் தோழர்கள் அன்பில்-தருமலிங்கம், பி. ஆர். இராமசாமி, ஏ. எம். ஜோசப், எம். கல்யாணசுந்தரம் எம். எம். ஏ., கே. எம். சந்திரசேகரன் ஆகியோர் பேசினர்.

கூட்டத்திற்கு திரு. கே. வெங்கடப்பெருமாள் தலைமை வகித்தார். (ந-கி.)

'அரசாங்க ஆதிக்கத்திலிருந்து கல்வி விடுதலை பெற வேண்டும்'

வினோபா வற்புறுத்துகிறார்

மதுரை, சன. 7—

"விரைவில் அரசாங்க ஆதிக்கத்திலிருந்து கல்வி விடுதலை பெற வேண்டியது அவசியமாகும். அப்போதுதான் பிரிட்டன் போன்ற அயல் நாடுகளைப்போல் இந்தியாவிலும் தனிப்பட்ட கல்வி நிறுவனங்களுக்கு ஊக்கம் ஏற்படும்" என்று, ஆசிரியர்கள் கூட்டமொன்றில் வினோபாபாவே கூறியுள்ளார்.

ரஷ்யத் திட்டங்கள் நிறைவேறவில்லையாம்

கடுமையான குறைபாடுகள் மிகுந்திருக்கிறதாம்!

"ரஷ்யாவில், நிலக்கரி, உலோகம், சிமெண்டு ஆகியவை சம்பந்தமான 1956-ம் ஆண்டுத் திட்டங்கள் முற்றுப் பெறவில்லை," என்று, ரஷ்யக் கம்யூனிஸ்டுக் கட்சி இதழான 'பிராவ்தா'வில் குறிப்பிடப்பட்டிருக்கிறது.

வீடு வசதி, விவசாயம், தலத்தாபனம் முதலியன நிறுவுவதில் கடுமையான குறைபாடுகள் உள்ளதென்றும், அறிவியல், பண்பாட்டுத் துறைகளில், அதிகரித்துவரும் மக்களுடைய தேவையைப் பூர்த்தி செய்வது கடுமையாக உள்ளது என்றும் கூறப்படுகிறது.

4,000 காங்கிரசார் விலகிவிட்டனர்?

அதிகாரபூர்வமான காங்கிரஸ் அபேட்சகர்களை எதிர்ப்பர்?

பாட்னா, சன. 7—

வரும் பொதுத் தேர்தலில் காங்கிரசின் அதிகாரபூர்வமான அபேட்சகர்களை எதிர்த்துப் போட்டியிடுவதென்று ஆயிரத்திற்குமேற்பட்ட பீகார் காங்கிரஸ்காரர்கள் முடிவு செய்துள்ளனராம்.

அதற்காக 11 பேர் கொண்ட குழு ஒன்று சந்தன்சிங் என்பவர் தலைமையில் அமைக்கப்பட்டிருக்கிறது.

4000-க்கு மேற்பட்ட காங்கிரஸ்காரர்கள் கட்சியிலிருந்து விலகிக்கொண்டனராம்!

ஒன்பது ஆண்டுகளாக பிரசவ வேதனையா?

'இந்தியா போன்ற ஏழை நாடு கஷ்டப்பட்டுத்தான் முன்னேற வேண்டியுள்ளது; இது, ஒரு தாய் அனுபவிக்கும் பிரசவ வேதனை போன்றது' என்று பண்டித நேரு கூறியுள்ளார்.

இலக்கியப் புத்தகங்கள் வெளியிட முடிவு

காரைக்குடி, சன 5—

காரைக்குடி திருக்குறள் கழகத்தினர், கழகச் சார்பில் இலக்கியப் புத்தகங்கள் வெளியிடுவதென முடிவு செய்திருக்கின்றனர்.

கடந்த மாதம் 23-ந் தேதியன்று நடைபெற்ற அக்கழகச் செயற்குழுக் கூட்டத்தில் மேற்கண்ட முடிவு எடுக்கப்பட்டதுடன், சென்னைக்குத் தமிழ் நாடு என்று பெயரிடுமாறு கேட்டுக்கொண்டும் மற்றும் அனுதாபத் தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

****

தி. மு. க. தேர்தல் நிதி நாடகங்கள்

அண்ணா அவர்களும் ... கழகத் தோழர்களும் நடிக்கும்

சந்திரோதயம்

ஜனவரி	ஜனவரி
15: பூந்தமல்லி (செங்கற்பட்டு மாவட்டம்)	20: மதுரை நகர்
16: காஞ்சிபுரம்	21: திருச்சி நகர்
17: சேலம் நகர்	22: குமாரபாளையம்
18: உடுமலை	23: போளூர் வ.ஆ.
19: கணியூர்	24: விழுப்புரம்

மேற்கண்ட தி. மு. க. கிளைகளின் நிர்வாகிகள், நாடக ஏற்பாட்டினைச் சிறப்புற நடத்திக் கொடுக்கும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருக்கிறார்கள். அவர்களின் முயற்சி இனிது நிறைவேற அனைவரும் பேராதரவு தருமாறு கேட்டுக்கொள்கிறோம்.

—தலைமைக் கழகம் (தி. மு. க.)

****

தேர்வுக் குழு

சுற்றுப்பயணம்

★

திருச்சி மாவட்டம் :

தி. மு. கழக அபேட்சகர் தேர்வுக் குழு உறுப்பினர்களான தோழர்கள் என். வி. நடராசன், கே. ஏ. மதியழகன் ஆகிய இருவரும் மாவட்டச் செயலாளர் அம்பில்-தருமலிங்கம் அவர்களுடன் 12-1-57 காலை 10 மணிக்கு திருச்சி நகர் (கிலேதார் வீதி, 9-வது எண்ணுள்ள கட்டிடத்தில், கரூர், குளித்தலை, வாளாடி, மணப்பாறை, பஞ்சம்பட்டி, பெரம்பலூர் (பொது), ஜெயங்கொண்டம், அரியலூர், திருமயம் ஆகிய தொகுதிகளுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபடுவார்கள்.

குறிப்பு:— மேற்கண்ட தொகுதிகளிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்களும் கழக முக்கியஸ்தர்களும், தேர்தலுக்கு நிற்க விருப்பம் தெரிவித்துள்ள அபேட்சகர்களும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து காணுமாறு அபேட்சகர் தேர்வுக் குழுவால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

****

சாபமிடுவோருக்கு....

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

வெற்றி பெருவிட்டால் நாங்கள் தூக்குப்போட்டுக் கொண்டு தொங்கவா போகிறோம்? நாங்கள் தேர்தலில் நிற்பது வெற்றி தோல்வியைக் கருத்தில் கொண்டல்ல; நாட்டில் ஜனநாயகக் கடமையை நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகத் தான் தேர்தலில் நிற்கிறோம். இதுவரை சட்டசபைக்கு வெளியே எங்கள் குரலை எழுப்பினோம்; இனிமேல் இங்கே நாங்கள் கூறுவதை சட்ட சபையில் கூறுவோம். இங்கே நாங்கள் கூறுவதைக் காதுகொடுத்துக் கேட்க மறுக்கும் சர்க்கார், அங்கே—சட்டசபைக்கு எங்களில் ஒருவர் இருவர் சென்றுல்கூட அவர்கள் அங்கே பேசுவதைக் கேட்டாகவேண்டும்.

"இங்கு நாம் கூறுவதையெல்லாம் உதவாத கருத்துக்கள் என்று கூறுபவர்கள், நாளை சட்ட சபையில் நாம் பேசும்போது அவைகளைப் பதிவு செய்தாகவேண்டும். சட்ட சபையில் இன்னின்னார் என்ன சொன்னார்கள் என்று கேட்டால், அவர்கள் பதிவு செய்ததை எடுத்துக் காட்டியாகவேண்டுமே?

இவ்வாறு, 8—1—57 மாலை 6 மணியளவில் சென்னை சூளை பு. அ. சௌந்தரபாண்டியனார் படிப்பகச் சார்பில், ஆலந்தா சுப்பிரமணிய ஆச்சாரி தெருவில் (சூளை மில் பின்புறம்) நடைபெற்ற படிப்பக 4-வது ஆண்டுத் துவக்க விழா, தி. மு. கழகத் தேர்தல் நிதி அளிப்பு விழாக் கூட்டத்தில் பேசின தி. மு. கழகப் பொதுச் செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.

(அவரது பேச்சு முடியவில்லை : தொடர்ந்து வெளிவரும்)

சென்னை நகரில் 1,000

வாக்குப் பதிவு நிலையங்கள்

வரப்போகும் பொதுத் தேர்தலை ஒட்டி சென்னை நகரில் சுமார் 1,000 வாக்குப் பதிவு நிலையங்கள் அமைக்கப்படும் என்றும், அவை அமைக்கப்படவிருக்கும் இடங்களை சென்னை நகர தேர்தல் அதிகாரியான நகரசபை கமிஷனர், பார்வையிட்டு வருவதாகவும் கூறப்படுகிறது.

சென்னையில் சிறப்புக் கூட்டம்

★

அண்ணா, நெடுஞ்செழியன்

பேசுவர்

13—1—57 ஞாயிறன்று காலை 9 மணியளவில், சென்னை கோகலே மண்டபத்தில், நண்பர் சங்கத்தின் சார்பில் சிறப்புக்கூட்டம் ஒன்று நடைபெறும்.

அண்ணா அவர்கள் 'தேவலோகத்தில் சில காட்சிகள்' எனும் பொருள் பற்றியும், பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'பண்டைத் தமிழகத்தில் சில காட்சிகள்' எனும் பொருள் பற்றியும் பேசுவர்.

தி. மு. க. தேர்தல் நிதி திரைப்படக் காட்சி

தி. மு. கழகத் தேர்தல் நிதிக்காக, பம்பாய்-மாதுங்காவில் 'ரிவோலி' சினிமாவில், பம்பாய்-மாதுங்கா தி. மு. கழகச் சார்பில், 13-1-57 காலை 8½ மணிக்கு 'இரத்தக் கண்ணீர்' தமிழ்ப் படம் திரையிடப்படும்.

இராக் இராணுவத்திடம் நவீன ஆயுதங்களாம்!

இராக் இராணுவத்திடம் எல்லா நவீன ஆயுதங்களும் உள்ளனவாம்! அணு யுத்தம் வந்தாலும் கவலை இல்லையாம்!

தண்டவாளம், தரையில் ஓடும் வண்டி!

நியூயார்க், ஜன. 8—

இரயில் பாதையின்மீது ஓடுவதற்கான இரும்புச் சக்கரங்களும் ரோடில் ஓடுவதற்குத் தேவையான இரப்பர் சக்கரங்களும் பொருத்தப்பட்ட ஒரு புதிய வாகனம் விரைவிலேயே அமெரிக்காவில் தயாரிக்கப்படவிருக்கிறதாம்!

40,200 பேர் மாண்டனர்!

1956-ம் ஆண்டில், அமெரிக்காவில், போக்குவரத்து விபத்துகளில் மொத்தம் 40,200 பேர் மாண்டனர் என்று தகவல் தரப்பட்டிருக்கிறது.

சென்னையில் திராவிடர் திருநாள்

கிளைக் கழகச் செயலாளர்கட்கு :

"இவ்வாண்டு திராவிடர் திருநாள் சீரும் சிறப்புடனும் மாவட்டக் கழகத்தின் சார்பில், சென்னையின் தென்பகுதியில் கொண்டாடப்படவிருக்கிறது.

"இன்னிசையுடன், செவிக்கும் சிந்தனைக்கும் களிப்பூட்டும் வகையில் பொதுச்செயலாளர் அவர்களும் கழக முன்னணி வீரர்களும் கலந்துகொண்டு விழாவினைச் சிறப்பிக்கின்றனர்.

"அன்று கிளைக் கழகங்கள் பணிகளை அலங்கரித்தும் வட்ட முழுமையும் கழகக் கொடி—தோரணங்கள் கட்டியும், ஊர்வலங்கள் நடத்தியும் சிறப்பாக நடத்தும்படி கேட்டுக்கொள்ளுகிறேன்.

"12 வயதுக்குட்பட்ட சிறுவர் சிறுமியர்களுக்கு 1. 'திராவிடர் திருநாள்', 2. 'கல்வி' ஆகிய இருதலைப்புகளில் சொற்பிரப் போட்டிகள் நடைபெறும். (நுழைவுக் கட்டணம் கிடையாது) வெற்றி பெறுகின்ற சிறுவர், சிறுமியர்களுக்குப் பொதுச்செயலாளர் அவர்கள் பரிசுகள் தந்து பாராட்டுரை வழங்குவார். போட்டிகளில் கலந்துகொள்பவர்கள, அவ்வவ்வட்டக் கிளைக் கழகச் செயலாளரிடம் அனுமதி பெற்று 12—1—57-க்குள் மாவட்டக் கழகத்திற்கு அறிவித்துப் பதிவு செய்துகொள்ள வேண்டும்.

"கிளைக் கழகத் தோழர்கள் அனைவரும் திராவிடர் திருநாள் வெற்றிகரமாக நடைபெற ஒத்துழைப்பு தந்து சிறப்பிக்க வேண்டுகிறேன்,"

என்று, சென்னை மாவட்டத் தி. மு. கழகத் துணைச் செயலாளர் கோ. செங்குட்டுவன் அறிவிக்கிறார்.

குறிப்பு : திராவிடர் திருநாளன்று வழக்கம்போல நடைபெறுகின்ற போட்டிப் பந்தயங்கள், தவிர்க்க முடியாத சில காரணங்களாலும், தேர்தல் நிலைமைகளை ஒட்டியும், பொதுச்செயலாளரின் ஆலோசனையின்பேரில் இவ்வாண்டு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

****

தேர்வுக் குழு - சுற்றுப் பயணம்

★

நெல்லை, இராமநாதபுரம், மதுரை மாவட்டங்கள் :

தி. மு. க. அபேட்சகர் தேர்வுக் குழு உறுப்பினர்களான தோழர்கள் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, எஸ். முத்து ஆகிய இருவரும் மேற்கண்ட மூன்று மாவட்டங்களிலும நிலைமையைக் கண்டறிந்து பொதுத் தேர்தலுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கக் கீழ்க்கண்டவாறு சுற்றுப்பயணம் செய்வார்கள் :—

10—1—57 : இடம் : திருநெல்வேலி
தொகுதி : நெல்லை, நாஞ்சில் மாவட்டத்தைச் சார்ந்த தொகுதிகள்

11—1—57 : இடம் : விருதுநகர்
தொகுதி : இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த தொகுதிகள்

12—1—57 : இடம் : மதுரை
தொகுதி : மதுரை மாவட்டத்தைச் சார்ந்த தொகுதிகள்

குறிப்பு:— மேற்கண்ட தொகுதிகளிலுள்ள கிளைக் கழகச் செயலாளர்களும், கழக முக்கியஸ்தர்களும், தேர்தலுக்கு நிற்க விருப்பம் தெரிவித்துள்ள அபேட்சகர்களும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து காணுமாறு அபேட்சகர் தேர்வுக் குழுவால் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

****

பார்க்பேர் பொருட்காட்சி : 56-57

சென்னை S.I A.A. திடலில் : 10-1-57 மாலை 6-30 மணிக்கு

திறந்தவெளி சகுந்தலா கலை அரங்கில்

இரா. நெடுஞ்செழியன்

அவர்கள் தலைமையில்

அண்ணா, ஈ. வெ. கி. சம்பத், கே. ஆர். இராமசாமி, எஸ்.எஸ். ராசேந்திரன், டி.வி. நாராயணசாமி, எம். என். கிருஷ்ணன், டி. கே. காந்தா மற்றும் இயக்க முன்னணி வீரர்கள் நடிக்கும்

'சந்திரமோகன்'— தமிழ் நாடகம்

தனிப்பகுதி : ரூ. 10, 5, 3, 2, 1. திறந்த வெளி இலவசம்

எம் எஸ் மோகன்—காண்டிராக்டர்

கழகக் கூட்டம்

★

சென்னை 6-வது வட்டம்
பெரம்பூர்—நெல்வயல் ரோடிற்கு அருகில்
11—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : க. அன்பிற்கரசன்
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
சத்தியவாணி-முத்து

★

பாண்டமங்கலம் :
சோமசுந்தரம் திடலில்
10—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : வீ. வணங்காமுடி
பேசுவோர்:
கி. மனோகரன்
வி. காளியப்பன்
வி. ஏ. இராமநாதன்

★

சாலையூர் :
தி. மு. கழகத் துவக்க விழா
10—1—57 மாலை 6 மணிக்கு
தலைவர் : அப்புசாமி
பேசுவோர்:
வே. பாண்டியன்
சு. கிட்டான்
வி. கே. கலைமணி

★

குமாரபாளையம்:
சந்தைப்பேட்டை மைதானத்தில்
11—1—57 மாலை 6½ மணிக்கு
பேசுவோர் :
மு. கருணாநிதி
சி. பி. சிற்றரசு

★

தாத்தையங்கார்பேட்டை :
(தா. பேட்டை, பிள்ளாதுரை கிளைகள் சார்பில்)
11—1—57 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
கி. மனோகரன்
சிற்றுளி-சுப்பிரமணியம்

தேர்வுக் குழு

சுற்றுப்பயணம்

★

வட ஆற்காடு மாவட்டம்

தி. மு. கழக அபேட்சகர் தேர்வுக் குழுவின் தலைவரான பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், 11—1—57 வெள்ளி காலை 10-மணிக்கு வேலூர்—டவுன் ஆலில் வட ஆற்காடு மாவட்டத்தன் நிலைமைகளைக் கண்டறிந்து பொதுத்தேர்தலுக்கு அபேட்சகர்களைத் தேர்ந்தெடுக்கும் பணியில் ஈடுபடுவார்.

குறிப்பு :— வட ஆற்காடு மாவட்டத்தைச் சார்ந்த கிளைக் கழகச் செயலாளர்களும், கழக முக்கியஸ்தர்களும், தேர்தலுக்கு நிற்க விருப்பம் தெரிவித்துள்ள அபேட்சகர்களும் குறிப்பிட்ட நேரத்தில் வந்து காணுமாறு பொதுச்செயலாளர் அவர்களால் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

தேர்தல் நிதி நாடகங்கள்- திருத்தம்

3-வது பக்கத்தில் வெளிவந்துள்ள தேர்தல் நிதி நாடகங்கள் கீழ்க்கண்டவாறு தேதி மாற்றம் செய்யப்பட்டிருக்கிறது; தோழர்கள் குறிப்பில் வைத்துக்கொள்ள வேண்டுகிறோம்.

ஜனவரி :
15 : பூந்தமல்லி
17 : குமாரபாளையம்
18 : உடுமலை
19 : கணியூர்
20 : மதுரைநகர்
21 : திருச்சிநகர்
22 : சேலம்நகர்
23 : போளூர்
24 : விழுப்புரம்
25 : தஞ்சைநகர்

—தலைமைக் கழகம் (தி மு.க.)

ஆமதாபாத் தி. மு. க.

தோழர்களுக்கு :

"10—11—56-ல், தோழர் டி கே. சீனிவாசன் அவர்கள் முன்னிலையில் அமைக்கப்பட்ட தி. மு. கழகத் தேர்தல் நிதிக் குழு இதுவரை தொடர்ந்து நிதி திரட்டி வந்துள்ளது. அக்கூட்டத்தில், தோழர்கள் அளித்த வாக்குப்படி, சிலர் பாதித் தொகை தந்தும், சிலர் இன்னும் தராமலும் இருக்கின்றனர். பொதுச்செயலாளர் அறிக்கைப்படி உடன் நிதி அனுப்பவேண்டி இருப்பதால், 10—1—57 முதல் 14—1—57 வரை ஐந்து நாட்கள் நிதிக் குழுவினர் தொடர்ந்து நிதி வசூலில் ஈடுபடுவார்கள். கழகத் தோழர்களும், ஆதரவாளர்களும் தங்கள் தங்கள் பங்கினைத் தவறாது கொடுக்குமாறு கேட்டுக் கொள்ளுகிறேன்,"

என்று, ஆமதாபாத் மாவட்டத் தி மு. கழகச் செயலாளர் இரா. தணிகாசலம் அறிவிக்கிறார்.

கடலூர் ஓ. டி. தி. மு. க. பொது உறுப்பினர்கட்கு :

10—1—57 இரவு 8½ மணிக்கு, அண்ணா அன்பு நிலையத்தில், கிளைக் கழகப் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெறும். பொங்கல் விழா, தேர்தல் நிதி, கழக ஆக்க வேலைகள் ஆகியவை ஆய்வுக்கெடுத்துக் கொள்ளப்படும்.

கோவை நகர 13-வது வட்ட தி. மு. க. உறுப்பினர்கட்கு :

11—1—57 இரவு 8 மணிக்கு, கோவை நகர 13-வது வட்டத் தி. மு. கழகக் கட்டிடத்தில் கிளைக் கழக உறுப்பினர் கூட்டம் நடைபெறும். கிளைத் துவக்க விழா, பொங்கல் விழா, தேர்தல் நிதி ஆகிய பிரச்சினைகள் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்படும்.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ. அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப் பெற்று, (24, சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப் பெறுகிறது. ஆசிரியர் : இரா. நெடுஞ்செழியன் எம். ஏ.